# குருசேத்திரம்

Guruseththiram

குරුසේත්තිරම්

களம்: 06 கணை: 41 ஒக்டோபர் – 2025




## Be Positive...! for New Education Reform



ISSN 3093-5415

Since : 2020 May 18

சமூகத்திற்கான மாற்றம் என்னிலிருந்து...

# குருசேத்திரம்

சமூகத்திற்கான மாற்றம் என்னிலிருந்து...

மாதாந்த இலத்திரனியல் சஞ்சிகை

ISSN 3093-5415

**பிரதம ஆசிரியர்**

கலாநிதி. சுப்பிரமணியம் பரமானந்தம்

**இணை ஆசிரியர்கள்**

திரு. ம.நிரேஸ்குமார்

திரு. நா.அம்பிகைபாகன்

**பதிப்பாசிரியர்**

திரு. ஞா.கயூரன்

**வெளியீடு**

குருசேத்திரம் வெளியீடு,
யாழ்ப்பாணம்.

**தொடர்புகளுக்கு**

guruseththiram@gmail.com

guruseththiram.blogspot.com

Scan Me

**பொறுப்புத் துறப்பு**

குருசேத்திரத்தில் இடம் பெறுகின்ற கட்டுரைகள், ஆக்கங்களில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் மற்றும் தகவல்களுக்கு அதனை எழுதியவர்களே பொறுப்புக்கூறக் கடப்பாடுடையவர்கள்!

## உள்ளே . . .

ஆசிரியர் பார்வையில்... 1

காட்சியும் கருத்தும் 2

சாலையோர நினைவுகள்... 2

21 ஆம் நூற்றாண்டுக்கான கற்பித்தல்-கற்றல் அணுகுமுறையில் முறையியல், தொழில்நுட்பம் மற்றும் செயற்கை நுண்ணறிவு 3

இலங்கையில் மாணவர்களின் மனநலம் மற்றும் சமூகப் பிரச்சினைகள் 6

எனது பட்டம் 8

தம்பி 8

சந்ததிக்கும் ஓர் சமூக நல்லிணக்கம் 8

உலகின் மர்மமான புனித இடங்கள் (02) 9

இலங்கையின் கல்விக் கொள்கையை 21ஆம் நூற்றாண்டின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் மேம்படுத்துவதன் அவசியம் 10

"இன்பா"வின் சிந்தனைத் தொடர் - 32 11

பின்லாந்து நாட்டின் கல்விமுறைமையும் இலங்கை பெற்றுக்கொள்ளக்கூடிய முன்மாதிரிகளும் (பகுதி 01) 12

கார்ல் ரோஜர்ஸ்: சுய எண்ணக்கருவின் வழியே மனித வளர்ச்சி 14

Dhora 'WIN' வரிகள் 15

பாடசாலைகளில் அனர்த்த முகாமைத்துவ செயற்றிட்டம் 16

கல்வி 4.0 எதிர்கால மாற்றத்திற்கான திறவுகோள் (04) 18

A Sun's Holiday 21

தந்தையர் தினம் 21

கதை வழி அற மொழி 21

பேசும் படங்கள் 22

# ஆசிரியர் பார்வையில்...

குருசேத்திரம் 41வது இதழுக்கு ஆசிரியர் தலையங்கம் எழுதுவதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். அதுவும் புலம்பெயர் தேசத்தின் உறவுகளையும் நாட்டையும் தரிசித்ததில், சட்டத்தின் ஆட்சி நடைபெறும் நாட்டிலிருந்து எழுதுவதையிட்டு இரட்டிப்பு மகிழ்ச்சி. காரணம் என்னை இனங்காட்டிய முதலாவது கட்டுரை "உலக அகதிகளாக தமிழர்கள்" என்னும் தலைப்பில் 1990 இல் எழுதியது.

யாழ் பலாலி ஆசிரியர் கலாசாலையில் முதலிடம் பெற்று பேராசிரியர் ஆறுமுகம் அவர்களின் கரங்களினால் பேராசான் R.S. நடராஜா அவர்களின் முன்னிலையில் பரிசில் பெற்ற கட்டுரை.

அதில் குறிப்பிட்ட விடயங்களை குறிப்பாக சமூக, பொருளாதார, கலாசார அம்சங்களை நேரடியாக உணரக்கூடியதாக அமைந்தது. சில பாடசாலைகளையும் முன்பள்ளிகளையும் தரிசிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. முன்பள்ளிகளுக்கு பிள்ளைகள் மகிழ்வுடன் ஓடிச் செல்லும் காட்சி, பிள்ளைகள் தமது வேலைகளை தாமே செய்யும் காட்சி, வீதி ஒழுங்கு முறைகளை கடைபிடிக்கும் பாங்கு, ஆசிரியர்களை அணுகும்முறை, ஆசிரியர்கள் பிள்ளைகளை அணுகும்முறை, பொதுப் போக்குவரத்து வசதிகள் என ஒவ்வொரு விடயத்திலும் "அடுத்தவருக்கு வசதியினங்களை" ஏற்படுத்தாத அணுகுமுறை யாவுமே மிகச் சிறப்பாக பழக்கப்படுத்தப்படுகின்றது. மனிதத்திற்கும் வாழ்வியலுக்குமான நிஜவாழ்க்கைத் தேவைகளை பழக்கப்படுத்துவதில் முன்னிற்கின்றன.

இலங்கையில் அறிமுகப்படுத்தியுள்ள புதிய கல்வி மறுசீரமைப்பானது மனித விழுமிய செயற்பாடுகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்பதுடன் பரீட்சை புள்ளிகளை ஒப்பிடும் முறைகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்படாமை யானது குறிப்பிடத்தக்க அம்சமாகும். அதேவேளை சட்டத்தின் ஆட்சியும் போதைப் பொருட்களிற்கு எதிரான செயற்பாடுகளும் இளம் சந்ததியினருக்கு வாழ்வின் மீதான பயத்தை நீக்குவதாக அமைகின்றது. எதிர்காலத்தில் போதைப் பொருளற்ற இலங்கையைக் கட்டி எழுப்ப ஒவ்வொருவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

அதேவேளை விபத்து மரணங்கள் இவ்வருடம் இதுவரை சராசரி 7ஐவிட அதிகமாக காணப்படுகின்றது. இவை பற்றியும் நாம் ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும். வேகமாக இலக்கை அடைவதற்கு பதிலா விவேகமாக இலக்குகளை அடைய முயற்சிக்க வேண்டும்.

மீண்டும் அடுத்த இதழில் சந்திக்கும் வரை...


அன்புடன்,
**சு.பரமானந்தம்**
PhD in Education- SL
பிரதம ஆசிரியர்.



# காட்சியும் கருத்தும்

**கலாநிதி சு.பரமானந்தம்**




## சாலையோர நினைவுகள்...

நேற்று நடந்த சாலை,
இன்று இரத்தத்தால் நிறைந்தது.

ஒரு ஹார்ன் சத்தம் -
ஒரு இதயம் நின்றது.

மொபைல் திரை ஒளி,
மூடியது கண்களின் ஒளியை.

ஒரு ஹெல்மெட் மறந்தவன்,
ஒரு குடும்பம் அழுதது.


சாலை மௌனமாகவே சொல்கிறது -
“நான் குற்றவாளி அல்ல,
அவசரத்தின் விலை - உயிர்!”

வேகம் ஒரு நொடியின் சுகம்,
அது பின் வரும் சுமை -
ஒரு தலைமுறையின் துயரம்.



# 21 ஆம் நூற்றாண்டுக்கான கற்பித்தல்-கற்றல் அணுகுமுறையில் முறையியல், தொழில்நுட்பம் மற்றும் செயற்கை நுண்ணறிவு

கலாநிதி. சுப்ரமணியம் பரமானந்தம்




## 1.0 அறிமுகம்

கட்டுருவாக்கவாதம் (Constructivism) என்பது மாணவர்கள் அறிவைப் பெறுவதற்கான ஒரு செயற்பாட்டு முறைமையாக விளங்கும் கல்விக் கோட்பாடாகும். இக் கோட்பாட்டின்படி, அறிவு என்பது ஆசிரியரால் நேரடியாக வழங்கப்படும் ஒன்றாக அல்லாமல் மாணவர்கள் தங்கள் சொந்த அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு புதிய தகவல்களை புரிந்து, ஒத்திசைத்து, சுயமாக அறிவைக் கட்டியமைப்பதைக் குறிப்பிடுகிறது. இது மாணவர் மையக் கற்றலை வலியுறுத்துகின்றது. ஜீன் பியாஜே, லெவ் விகாட்ஸ்கி, ஜெரோம் ப்ரூனர் ஆகியோரின் ஆய்வுகள் கட்டுருவாக்கவாதக் கோட்பாட்டை வளர்த்ததில் முக்கிய பங்காற்றியுள்ளன. இதில், "Zone of Proximal Development" (ZPD), "Learning by doing" மற்றும் "Scaffolding" போன்ற கருத்துக்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. வகுப்பறையில் கட்டுருவாக்கவாதம் கையாளப்படும்போது, மாணவர்கள் பிரச்சனைகளை ஆராய்ந்து தீர்வு காணும் செயற்பாடுகளில் ஈடுபடுகிறார்கள். குழு கலந்துரையாடல்கள், விவாதங்கள், செயற்றிட்டங்கள், தனிநபர் ஆய்வுகள், பிரச்சினை தீர்த்தல், ஒத்துழைத்துக் கற்றல், தொடர்பாடல்கள் மற்றும் செயல்முறை கணிப்பீடுகள் போன்றவை இதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. இவ்வகையான அணுகுமுறை, மாணவர்களின் சிந்தனைத் திறன், பிரச்சனை தீர்க்கும் திறன், ஒத்துழைப்பு, படைப்பாற்றல் மற்றும் புத்தாக்கத்திறன்களையும், தனியாள்மையக் கற்றலையும் ஊக்குவிக்கின்றது. கட்டுருவாக்கவாதம் 21ம் நூற்றாண்டு கல்விக்கான திறன்கள் மற்றும் தேவைகளை பூர்த்தி செய்யும் சிறந்த கற்பித்தல்-கற்றல் கோட்பாடாக கருதப்படுகின்ற அதேவேளை செயற்கை நுண்ணறிவின் வருகையானது கற்றல் கற்பித்தல் செயல்முறையில் விரைவான மாற்றத்தை உள்வாங்கி வருகின்றது. இவை தொடர்பாகவே இக்கட்டுரையில் ஆராயப்படுகின்றது. சாதாரண கற்பித்தலில், நினைவாற்றல் சார்ந்த பரிமாற்ற முறையில், ஆசிரியர் உண்மையான அறிவாகக் கருதப்படும் தகவல்களை மாணவர்களிடம் வழங்குகின்றார், மேலும் மாணவர்கள் இந்த தகவல்களை, தேவைப்படும் வரை, அதாவது தேர்வுகள் வரை அப்படியே சேமித்து வைக்கின்றனர். Richardson னின் (1997) கருத்துப்படி, பரிமாற்ற முறைகள் மூலம் தகவல் பெறப்படும் போது, அது எப்போதும் முன்னறிவுடன் நன்கு ஒருங்கிணைக்கப் படாமல் தேர்வுகள் போன்ற முறையான கல்வி நிகழ்வுகளுக்கு மட்டுமே அடிக்கடி அணுகப்பட்டு வெளிப்படுத்தப்படுகிறது. Jonassen (1994) இன் கூற்றுப்படி, கட்டுருவாக்கவாதம் "கற்றல் சூழல்கள் பல கண்ணோட்டங்கள் அல்லது யதார்த்தம், அறிவு

கட்டுமானம், சூழல் வளம் மற்றும் அனுபவம் சார்ந்த செயல்பாடுகளின் விளக்கங்களை ஆதரிக்க வேண்டும் என்று முன்மொழிகிறது". எனவே, கட்டுருவாக்கவாதம் அறிவு உருவாக்கத்தில் கவனம் செலுத்தும் அதேவேளை செயற்கை நுண்ணறிவுத் தொழில் நுட்பம் கற்றல் கற்பிதலில் புதிய மாற்றங்களை விரைவுபடுத்துகின்றது.

## 2.0 கட்டுருவாக்கக்கற்றலின் சிறப்பியல்புகள்

கட்டுருவாக்கவாதம் ஒரு கற்பித்தல் கற்றல் அனுபவமுள்ள செயல்முறையாக கட்டமைக்கப்பட் டுள்ளது என்று வாதிடுகிறார். இதில் தங்கள் புதிய யோசனைகள் அல்லது கருத்துகளை அவர்களின் தற்போதைய அல்லது கடந்தகால அறிவின் அடிப்படையில் ஒரு அர்த்தமுள்ள கற்றல் சூழலில் உருவாக்குகிறார்கள். கற்றலிற்கான திறவுகோல், ஒரு கட்டுருவாக்கவாத கட்டமைப்பில், கற்பவர்கள் புதிய தகவல்களை முந்தைய அனுபவத்துடன் இணைப்பதற்கான பல வழிகளைக் கண்டுபிடிப் பதாகும். "கற்பவர்கள் உலகில் தங்கள் அனுபவங் களிலிருந்து அறிவை உருவாக்கி புனரமைக்கி றார்கள்" என குறிப்பிடப்படுகின்றது. (Kafai and Resnik, 1996). Jonassen (1994) கட்டுருவாக்கவாத கற்றல் சூழல்களுக்கும் பாரம்பரிய கற்றல் கற்பித்லுக்கு மிடையே உள்ள வேறுபாடுகளை பின்வருமாறு சுருக்கமாகக் கூறுகிறார். கட்டுருவாக்கவாத கற்றல் சூழல்கள் வருமாறு,

(அ) பல பரிமாணங்கள் மற்றும் உண்மை வாழ்க்கை அனுபவங்களை அல்லது உண்மை க்கு கிட்டிய அனுபவங்களை வழங்குகின்றன. இதன் மூலம் மிகைஎளிமைப்படுத்தலைத் தவிர்த்து உடன்நிகழ் கற்றல் பயிற்சிகளை வழங்குகின்றது.

(ஆ) மனப்பாடம் செய்வதை விட அறிவை நன்கு உருவாக்குவதை ஊக்குவிக்கின்றது.

(இ) நிஜ உலகில் படிமுறைக் கட்டமைப்பாக்கப் பட்ட, தொகுக்கப்பட்ட அர்த்தமுள்ள, உண்மை யான, சூழமைவு சார்ந்த செயலாற்றுகைகள் வலியுறுத்தப்படுகினறன.

(ஈ) சிந்தனைமிக்க அறிவார்ந்த பிரதிபலிப்பு ஊக்கு விக்கப்படுகின்றது.

(உ) போட்டி நிலைக்குப் பதிலாக ஒத்துழைப்பு மற்றும் இடைவினைகள் வலியுறுத்தப்படு கின்றது.

விகொட்சி 1978 இனால் முன்வைக்கப்பட்ட அறிகையெழல் இடல் அல்லது சாரக்கட்டல் (Scaffolding) உயர்ந்த உள இயக்கச் செயல்பாடுகள், கவனம் அல்லது நினைவாற்றல் அல்லது குறியீடுகளின் அடிப்படையில் சிந்திக்கும் திறன் ஆகியவை மனிதர்களுக்கு தனித்துவமான கற்றல் பொறிமுறையாகக் காணப்படுகின்றது. இந்த மாதிரியில் இந்த செயல்பாடுகளின் வளர்ச்சி சமூக சூழமைவுக் கலாசாரத்துடன் பிணைக்கப்பட்டுள்ளது. ஆசிரியர்கள் இந்த உயர் செயற்பாடுகளை மாணவர்கள் உள்வாங்கும் வகையில் அறிவுறுத் தலை வழங்குகிறார்கள். இந்த செயற்பாடுகள் மூலம் மாணவர் சுய-வழிப்படுத்தப்பட்ட கற்றலுக்குத் தேவை யான வளங்களைப் பயன்படுத்தி கற்றல் இலக்கு களை அடையக்கூடியதாக இருப்பார்கள்.

மேலும், Ginige (2005) கலைத்திட்டத்தில் செயற்படுத்தப்படும் கட்டுருவாக்க அணுகுமுறையில் 5E அறிவுறுத்தல் வடிவமைப்பு முக்கியமான கூறுகளில் ஒன்றாகும் என விளக்கினார். தேர்ச்சி அடிப்படையிலான கலைத்திட்டம் 2005 கல்விச் சீர்திருத்தத்தில் அறிமுகப்படுத்தப்பட்டு கற்றல்-கற்பித்தல் செயற்பாட்டில் தொழில்நுட்பக் கருவிக ளுடன் ஒருங்கிணைக்கப்பட்ட தேர்ச்சி அடிப்படை யிலான கலைத்திட்டத்தை செயற்படுத்துவதற்கான ஒரு கருவியாக 5E அணுகுமுறை கருதப்படுகிறது. இம்முறை தற்போது பாவனையில் இல்லாது விடினும் கட்டுருவாக்க கற்பித்தல் முறைக்கான அடிப்படை யாக இன்றும் விளங்குகின்றது.

## 3.0 கட்டுருவாக்கவாத அடிப்படை

கற்றல்-கற்பித்தல் சூழமைவை உருவாக்கு வதற்கு தேவையான ஆலோசனைகளையும் வழிகாட்டுதல்களையும் கோட்பாடுகளையும் தொழில் நுட்பக்கருவிகளின் பயன்பாட்டிற்கு கட்டுருவாக்க வாதம் வழங்குகிறது. இங்கே, மாணவர்கள் உண்மையான பிரச்சினை தீர்க்கும் அல்லது முடிவெடுக்கும் விடயங்களில் செயலுறுநிலையில் ஈடுபட வேண்டும். இந்தக் கற்றல் வடிவங்களின் நம்பிக்கையானது மாணவர்களின் விளக்கத்தை மேம்படுத்துவதும், வெவ்வேறு நேரங்களில், வெவ்வேறு நோக்கங்களுக்காக மறுசீரமைக்கப்பட்ட சூழல்களில் ஒரே பொருளை வெளிப்படுத்துவதன் மூலம் அவர்களின் தகவலைப் பரிமாற்றுவதும் ஆகும் (Spiro et al., 1991). கட்டுருவாக்கம் அறிவுரு வாக்க உளவியல், கல்வி ஆய்வு மற்றும் நரம்பியல்

இயக்க அடிப்படையில் தெரிவிக்கப்படும் கற்றல் கோட்பாடாகும். இது கற்றலை அனுபவம் மற்றும் சமூக இடைவினைப்பாட்டின் விளைபொருளாகக் கருதுகிறது. கட்டுமானவாதிகள் கற்றலை ஒரு தனிப்பட்ட நிகழ்வாக கருதுகின்றனர். பின்வரும் கொள்கைகள் பல்வேறு கட்டுருவாக்கவாத கோட் பாட்டாளர்களின் பணியை அடிப்படையாகக் கொண்ட வையாக காணப்படுகின்றது. (Sharon & Mary 1999).

கற்றவர்கள் ஒரு கற்றல் சூழ்நிலைக்கு தனித்துவமான முன் அறிவு, அனுபவம் மற்றும் நம்பிக்கைகளை கொண்டுள்ளார்கள். ஒவ்வொரு கற்பவருக்கும் உலகத்தைப் பற்றிய அவரது விளக்கத்தைப் பாதிக்கும் அனுபவங்கள் உள்ளன. அந்த தனித்துவமான அனுபவங்கள் கற்றலிற்கு அடித்தளமாக அமைகின்றன. அவை புதிய உள்ளடக்கத்துடன் தனிப்பட்ட இணைப்புகளுக்கான வாய்ப்புகளை வழங்குகின்றன.

கற்றல் உள்ளார்ந்ததாகக் கட்டுப்படுத்தப்பட்டு அறிவுருவாக்கம் செய்யப்படுகிறது. கற்றவர்கள் தகவலை எடுத்துக்கொள்கிறார்கள், அதை அவர் களின் தனிப்பட்ட கட்டமைப்பிற்கு ஏற்றவாறு செயலாக்கி, புதிய விளக்கத்தை உருவாக்குகி றார்கள். இவ் அறிவுக் கட்டுமானம் ஒவ்வொரு தனிநபரின் தனிப்பட்ட தளத்தில் உள்ளார்ந்ததாக நிகழ்கின்றது,

பல்வேறு கருவிகள், வளங்கள், அனுபவங்கள் மற்றும் சூழல்கள் மூலம் அறிவு பல வழிகளில் கட்டமைக்கப்படுகிறது. நாம் பல்வேறு வழிகளில் கற்கின்றோம் என Constructivist கற்றற் கோட்பாடு குறிப்பபிடுறது. கற்பித்தல் செயல்முறையில் நாம் தீவிரமாக ஈடுபட வேண்டியிருக்கும் போது அதிக வாய்ப்புகள் ஏற்படுகின்றன. அது நமது விளக்கத்தை மேம்படுத்துகிறது. நல்ல ஆசிரியர்கள் எப்போதும் அனுபவத்தை ஒரு அறிவுறுத்தல் கருவியாகப் பயன்படுத்துகின்றனர். அதனால்தான் ஆசிரியர்கள் களப்பயணங்கள் மற்றும் செயற் திட்டங்களை ஏற்பாடு செய்கிறார்கள். அதன் மூலம் கற்பித்தல் உட்பட பெரும்பாலான தொழில்களை முடிக்க கட்டுறுப்பயிற்சி அல்லது தொழிற்பயிலுனர் பயிற்சி (internship or apprenticeship) அவசியமாகிறது.

கற்றல் கோட்பாடுகள் கல்வியின் அடித்தளங் களில் ஒன்றாகும். B.F. Skinner நடத்தைவாதம் முதல் பன்முக நுண்மதிக் கோட்பாடு Gardner's கோட்பாடு, Dewey's கட்டுருவாக்க கொள்கை வரை, கல்வியிய லாளர்கள் கற்றல் கோட்பாடுகளின் தாக்கத்தை பல ஆண்டுகளாக உணர்ந்துள்ளனர். (Software & Information Industry Association, 2000). இது வகுப்பறையில் உள்ள தொழில்நுட்பத்தை கல்வியிய லாளர்களுக்கும் பொதுமக்களுக்கும் ஆர்வமுள்ள மையமாக மாற்றுகின்கிறது. அதிஷ்டவசமாக இன்றைய தொழில்நுட்பம், தனிப்பட்ட கணினிகள் மற்றும் கல்வி மென்பொருளை நவீன வகுப்பறையில் உள்ள பல்வேறு கற்றல் கோட்பாடுகளை ஆதரிப்பதற்கான பயனுள்ள முறையாக உதவு கின்றது.

கட்டுருவாக்கவாதம் ஆசிரியர் கல்வியில் ஒரு வலுவான செல்வாக்கு செலுத்துகிறது. இது ஆசிரியர்களுக்கு தொழில்நுட்பத்தை கையாளும் ஆக்கபூர்வமான கற்பித்தல் நடைமுறைகளைப் பயன்படுத்துவதற்கான வளங்கள், திறன்கள் மற்றும் யோசனைகளை வழங்குகின்றது. எவ்வாறாயினும், குறிப்பாக தொழில்நுட்பத் துறையில் இந்த யோசனைகளைப் பயன்படுத்தும் தற்போதைய பயிற்சி ஆசிரியர்களில் கட்டுருவாக்கவாத தத்துவங் களை இன்னும் அதிகரிக்க வேண்டிய அவசியம் உள்ளது. Rakes, Fields and Cox (2006) ஆசிரியர்களின் கணினித் திறன்கள் மற்றும் தொழில்நுட்பத்துடன் கூடிய வசதி ஆகியவை தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்பதைக் குறிப்பிடுகின்றது.

வகுப்பறையில் கட்டுருவாக்கவாதத்தை நடை முறைப்படுத்துவது, கல்விக்கான பாரம்பரிய அணுகு முறைகளில் இருந்து வேறுபட்ட ஒரு நெகிழ்ச்சியான சூழலை உருவாக்குகிறது. மாணவர்களை முதன் மையாகக் கொண்ட இவ்வணுகுமுறையில் ஆசிரி யரின் பங்கு மிகவும் நெகிழ்வானது, ஏனெனில் ஆசிரியர் பெரும்பாலும் அறிவு விநியோகிப்பாளராக இல்லாமல் எளிதாக்குபவர் அல்லது வசதிப்படுத் துனர் பாத்திரத்தை ஏற்க அழைக்கப்படுகிறார். கட்டுருவாக்கவாத ஆசிரியர்கள், மாணவர்களை கூட்டு முயற்சியில் ஈடுபடுத்துவதன் மூலம் அவர்களின் இயல்பான ஆர்வத்தை உருவாக்கு கிறார்கள் மற்றும் நிஜ-உலகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் மாணவர்களுக்கு அவர்களின் வகுப்புப் பணிக்கான சூழலை வழங்குவதற்கும், சக மாணவர்களிடையே போட்டியை ஊக்குவிக்காமல் ஒத்துழைத்துக் கற்பதற்கான அனுபவங்கள் வழங்கப் படுகிறது.

# இலங்கையில் மாணவர்களின் மனநலம் மற்றும் சமூகப் பிரச்சினைகள்

**ப.விஜிதரன் SLPS**
**உதவி அதிபர்**
**வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்**
**(தேசிய பாடசாலை)**

**சுருக்கம்**

இலங்கையில் மாணவர்களின் மனநலப் பிரச்சினைகள் கடந்த பத்து ஆண்டுகளில் பெரிதும் அதிகரித்துள்ளன. Ministry of Health Sri Lanka (2024) வெளியிட்ட புள்ளிவிவரங்களின்படி, பள்ளி மற்றும் பல்கலைக்கழக மாணவர்களில் சுமார் 22% பேர் மனநல சவால்களை எதிர்கொள்கிறார்கள். பரீட்சை அழுத்தம், சமூக அழுத்தம், குடும்ப பிரச்சினைகள், போதைப்பொருள் பயன்பாடு, இணைய துன்புறுத்தல், மற்றும் எதிர்கால வேலைவாய்ப்பு பற்றிய அச்சம் ஆகியவை மாணவர்களின் மனநலத்தை தீவிரமாக பாதிக்கின்றன. இந்தக் கட்டுரை மாணவர் மனநல நிலையை, சமூகப் பிரச்சினைகளை, அவற்றின் விளைவுகளை, மற்றும் தீர்வுகளை விதிமுறை களுக்கு ஏற்ப ஆய்வு செய்கிறது.

முக்கிய சொற்கள் (Keywords): மாணவர் மனநலம், சமூகப் பிரச்சினைகள், இலங்கை, கல்வி அழுத்தம்,

## I. அறிமுகம்

இலங்கையில் கல்வி அமைப்பு பல்வேறு மாற்றங்களை எதிர்கொள்கிறது. போட்டித் தேர்வுகள், வேலைவாய்ப்பு குறைவு, சமூக எதிர்பார்ப்புகள், மற்றும் பெற்றோரின் அழுத்தம் ஆகியவை மாணவர்களின் மனநிலையை பாதிக்கின்றன.

World Health Organization (WHO, 2023) அறிக்கையின்படி, தெற்காசியாவில் உள்ள 15–24 வயதுடைய இளைஞர்களில் சுமார் 17% பேர் மனநலக் கோளாறுகளை சந்திக்கிறார்கள். இலங்கையில் இந்த விகிதம் உலக சராசரியை விட அதிகமாக உள்ளது. இது கல்வி மற்றும் சமூக அமைப்புகளுக்கான பெரிய சவாலை உருவாக்குகிறது.

## II. இலக்கிய ஆய்வு

உலகளாவிய அளவில் மாணவர்களின் மனநல பிரச்சினைகள் அதிகரித்துவருகின்றன. UNICEF (2024) வெளியிட்ட ஆய்வின்படி, உலகளவில் மாணவர்களில் சுமார் 13% பேர் மனநலச் சவால்களை சந்திக்கிறார்கள்.

இலங்கையின் சூழலில், Ministry of Health Sri Lanka (2024) வெளியிட்ட ஆய்வு காட்டுகிறது:

- பரீட்சை அழுத்தம்
- குடும்ப சிக்கல்கள்
- பொருளாதார நிலைத்தன்மை குறைவு
- சமூக வன்முறை, இணைய துன்புறுத்தல்
- போதைப்பொருள் பயன்பாடு

மேலும், National Dangerous Drugs Control Board (NDDCB, 2024) தரவுகளின்படி, இலங்கையில் பாடசாலை மாணவர்களில் சுமார் 7% பேர் குறைந்தது ஒருமுறையேனும் போதைப்பொருள் பயன்படுத்தியுள்ளனர்.

## III. ஆய்வு முறையியல்கள்

இந்த ஆய்வுக்கட்டுரையில் இரண்டாம் நிலை ஆதாரங்கள் (secondary sources) மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளன. தரவுகள் பின்வரும் அமைப்புகளிலிருந்து பெறப்பட்டன:

World Health Organization (WHO, 2023)
UNICEF Sri Lanka (2024)
Ministry of Health Sri Lanka (2024)
National Dangerous Drugs Control Board (2024)
Police Children & Women Bureau (2024)

## IV. மாணவர் மனநலச் சவால்கள் மற்றும் காரணிகள்

### 1. பரீட்சை அழுத்தம்

UNICEF (2024) ஆய்வின்படி, இலங்கையில் 12–18 வயது மாணவர்களில் 28% பேர் பரீட்சை அழுத்தத்தால் மனச்சோர்வை அனுபவிக்கிறார்கள்.

### 2. குடும்பப் பிரச்சினைகள்

WHO (2023) வெளியிட்ட அறிக்கையின்படி, குடும்பத் தகராறு, வறுமை, மற்றும் பெற்றோரின் அழுத்தம் ஆகியவை மாணவர்களின் மனநலத்துக்கு தீவிர தாக்கங்களை ஏற்படுத்துகின்றன.

### 3. சமூக வன்முறை மற்றும் Bullying

Police Children & Women Bureau (2024) அறிக்கையில், பள்ளிகளில் bullying சம்பவங்கள் கடந்த ஐந்து ஆண்டுகளில் 30% அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

### 4. போதைப்பொருள் பழக்கம்

NDDCB (2024) ஆய்வின்படி, நகர்ப்புறங்களில் உள்ள பள்ளி மாணவர்களில் 7% பேர் குறைந்தது ஒருமுறையேனும் போதைப்பொருள் பயன்படுத்தியுள்ளனர்.

### 5. இணைய துன்புறுத்தல் (Cyberbullying)

UNICEF Sri Lanka (2024) கூறுவதின்படி, மாணவர்களில் 13% பேர் குறைந்தது ஒருமுறையேனும் இணைய துன்புறுத்தலுக்கு ஆளாகியுள்ளனர்.

### 6. வேலைவாய்ப்பு பற்றிய அச்சம்

Ministry of Health Sri Lanka (2024) வெளியிட்ட தரவின்படி, A/L முடித்த மாணவர்களில் 41% பேர் எதிர்கால வேலைவாய்ப்பு குறித்த பெரும் கவலையில் உள்ளனர்.

### 7. சமூக ஊடக அடிமைத்தனம்

WHO (2023) தரவுகளின்படி, சமூக ஊடகங்களை தினசரி 5 மணிநேரத்திற்கும் மேலாக பயன்படுத்தும் மாணவர்களில் 24% பேர் மனச்சோர்வு மற்றும் கவலைக் கோளாறுகளால் பாதிக்கப்படுகின்றனர்.

## V. மாணவர் மனநலப் பிரச்சினைகளின் விளைவுகள்

WHO (2023) அறிக்கையின்படி, 15–19 வயது இளைஞர்களின் மரணங்களில் தற்கொலை இரண்டாவது முக்கியக் காரணமாக உள்ளது.

மற்ற விளைவுகள்:
கல்வித் திறன் குறைவு
தேர்ச்சி விகிதம் குறைவு
மனச்சோர்வு மற்றும் தனிமைப்படுத்தல்
சமூக உறவுகள் பாதிப்பு
போதைப்பொருள் பயன்பாட்டின் அதிகரிப்பு

## VI. தீர்வுகள் மற்றும் பரிந்துரைகள்

### 1. கல்வி துறையின் பங்கு

மாணவர் ஆலோசகர்கள் பள்ளிகளில் நியமிக்கப்பட வேண்டும் (Ministry of Health Sri Lanka, 2024).

பரீட்சை மையப்படுத்தப்பட்ட கல்வி முறையிலிருந்து திறன் அடிப்படையிலான கல்வி முறைக்கு மாற்றம் செய்ய வேண்டும்.

### 2. குடும்பத்தின் பங்கு

பெற்றோர்-மாணவர் உறவை வலுப்படுத்துதல்

அதிகப்படியான ஒப்பீடுகள் மற்றும் அழுத்தங்களை தவிர்த்தல்

### 3. அரசின் பங்கு

National Mental Health Policy (2024) செயல்படுத்துதல்

மாணவர் மனநல பரிசோதனை திட்டங்களை அறிமுகப்படுத்துதல்

24/7 மாணவர் உதவி அழைப்புக்குறிகள் (helplines) அமைத்தல்

### 4. சமூகத்தின் பங்கு

Cyberbullying எதிர்ப்பு சட்டங்களை வலுப்படுத்துதல்

போதைப்பொருள் விழிப்புணர்வு முகாம்களை அதிகரித்தல்

## VII. முடிவுரை

மாணவர்களின் மனநலமும் சமூகப் பிரச்சினைகளும் இலங்கையின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் முக்கிய அம்சங்களாகின்றன. WHO (2023) மற்றும் UNICEF (2024) ஆகியவற்றின் ஆய்வுகள் காட்டுவதுபோல், கல்வி அழுத்தம், குடும்பச் சிக்கல்கள், சமூக வன்முறை, மற்றும் இணைய துன்புறுத்தல் ஆகியவை மாணவர்களின் மனநிலையை பாதிக்கின்றன. இப்பிரச்சினைகளுக்கு தீர்வுகாண, அரசு, பள்ளிகள், பெற்றோர், மற்றும் சமூக அமைப்புகள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்.

### மேற்கோள்கள்

World Health Organization. (2023). Adolescent mental health report. Geneva: WHO.
UNICEF Sri Lanka. (2024). Education and Mental health data. Colombo: UNICEF.
Ministry of Health Sri Lanka. (2024). Annual school health statistics. Colombo: MoH.
National Dangerous Drugs Control Board. (2024). Drug usage among students. Colombo: NDDCB.
Police Children & Women Bureau. (2024). Annual report on school violence. Colombo: PCWB.

# சந்ததிக்கும் ஓர் சமூக நல்லிணக்கம்

ஆதாமும் ஏவாலும்
எனைப் படைத்தனர் என ஒருவன்
அப்பனும் அம்மையும்
எனைப் படைத்தனர் என ஒருவன்
அல்லாஹ் அவனே
எனைப் படைத்தான் என ஒருவன்
புத்தன் தன் புனிதத்தினாலே
எனைப் படைத்தான் என ஒருவன்

நித்தம் நித்தம் சண்டையாகுது
நியாயம், சமத்துவம் அற்றுப்போகுது
ஒத்துழைப்பு அடியோடு மறையுது
ஒருமைப்பாடு கேள்விக்குறியாகுது
பகுத்துண்ணும் பண்பும் குறையுது
பகுதி பகுதியாய் தேசம் பிரியுது
நண்பா (2)

சாதி, மதவெறி, பேதம் என்று
சாக்கடைக்குள் மூழ்காதே நண்பா
சாஸ்திரங்கள், சம்பிரதாயங்கள் என
சாட்டுப்போக்கு சொல்லாதே நண்பா
சண்டைகள் சச்சரவுகள் என
சந்தி சந்தியாய் திரியாதே நண்பா
மாறாக (2)

பாசமழை பொழிந்திடு நண்பா
பார் எங்கும் சமாதானம் நிலவ
சுற்றம் எங்கும் பழகிடு நண்பா
சுற்றுச்சூழல் பாதுகாப்பு பெருக
பிளவு எனும் சொல்லை அடியோடு
மறந்திடு நண்பா
பிறருக்கு உதவி பிணியற்று வாழ
நண்பா

சமூகப் பொறுப்புடனே நடந்து - புது
சரித்திரத்தை படைத்திடுவோம் -
எதிர்கால
சந்ததிக்கும்
சமூக நல்லிணக்கத்தை விதைத்திடுவோம்
சஞ்சலங்கள் ஏதுமின்றி - புவிதனில்
சரிநிதமும் வாழ வழிவகுத்திடுவோம்

**- Keerththana Sivalingarasa -**

# தம்பி

உலகத்திற்கு வரும் முன்னே என் இதயத்தை கொள்ளையடித்த கொள்ளையன்!

இவ்வுலகில் அவன் பிறந்ததும் எனக்கு அக்கா எனும் உரிமை பதவியை வழங்கியவன்!

அவன் முதலில் அக்கா என்று கூப்பிட்ட சொல் இன்றும் என் மனதில் பதிந்து நிற்கிறது!

அவன் காலப்போக்கில் நான் சொல்லும் வேலைகளை செய்யும் விநோத வேலைக்காரனாய் மாறினான்!

எனக்கு ஒரு பிரச்சினை என்றால் அவன் தான் முதலில் முன்வந்து நிற்பான்

அவனை அழவைத்து பார்க்கும் ஆனந்தமே தனிச் சுகம்!

என் பொருட்களை ஏன் எடுத்து பாவித்தாய் என்று போர்க்களத்தில் சண்டைக்கு நிற்கும் சண்டைக்கோழி அவன் !

பக்கத்தில் இருக்கும் போது பகவனைப் போல பார்த்தேன்!

அவன் தொலை தூரம் சென்ற பின் வேதனையில் உதிர்ந்து போனேன் ஆயிரம் உறவுகள் இருந்தாலும் தம்பி போல ஆகி விட முடியாதே!!

**-😊 Mohana Parthipan**
**Sandilipay.**

# எனது பட்டம்

எனது பட்டம் பல வண்ணங்களைக்கொண்டது

நான் காற்றடிக்கும் நேரத்தில் எனது பட்டத்தை ஏற்றுவேன்

எனது பட்டம் மிகவும் அழகானது

எனது நண்பனுக்கும் எனது பட்டத்தை கொடுத்து விளையாடுவேன்

என் பட்டத்திலுள்ள ஈர்க்கு உடைந்து விட்டது

எனது பட்டத்தை எனக்கு மிகவும் பிடிக்கும்.

ஆ.அபர்சன்
கிளி/முருகானந்தா ஆரம்பப் பாடசாலை



# உலகின் மர்மமான புனித இடங்கள் (02)

## ஹெக்ரா (சவுதி அரேபியா)

- M.S. Fathima Safeena –

இப்போது ஜோர்டான் என்று அழைக்கப்படும் பகுதிக்கு வடமேற்கே 500 கி.மீ தொலைவுக்கும் அப்பால் பெட்ரா என்ற தலைநகரை நபாட்டியன்கள் உருவாக்கினர். பின்னர் இரண்டாவது பெரிய நகராக ஹெக்ராவை உருவாக்கினர். ஜோர்டான் பகுதியானது சவுதி அரேபியாவின் அல்உலா பிராந்தியத்தில் உள்ளது. இது பண்டைகாலத்திய கல் நகரமாகும் (முஸ்லிம் மக்கள், இதனை அல்-ஹிஜ்ர் என்றும் மதாயின் சாலிஹ் என்றும் அறிந்துள்ளனர்). இதன் பூர்வீகம் கிமு 1 ஆம் நூற்றாண்டு வரையிலான வேர்களைக் கொண்டிருக்கிறது. தவிர இது நாட்டின் முதலாவது சர்வதேச யுனெஸ்கோ பாரம்பரிய சின்னமாக உள்ளது. இங்கு 100க்கும் மேற்பட்ட பாதுகாக்கப்பட்ட கல்லறைகள் மணற்கல் வெளியில் செதுக்கப்பட்ட விரிவான முகப்புகளுடன் உள்ளன.

“பெட்ராவில் இருப்பது போல இவை அரசர்கள், ராணிகள், பிரபலமான மக்கள் ஆகியோரை புதைக்கும் இடங்களாகும்” என விவரிக்கிறார் ரெய்னர். “இந்த ஒட்டு மொத்த பகுதியும் பண்டைய கால வணிகர்கள் பயணிப்பதற்கான ஒரு பகுதியாக இருந்தன. சவுதி அரேபிய தீபகற்பத்தின் தூர கிழக்குப் பகுதியில் அரேபிய வணிக கப்பல்கள் நிறுத்தப்படும். பின்னர் ஒட்டகங்கள் வாயிலாக இந்த பகுதியைக் கடந்து வணிகர்கள் செல்வர். பின்னர் பெட்ரா பகுதிக்கும், புனிதமான நிலத்துக்கும் செல்வர். அப்படி செல்லும் மக்கள் மிகவும் செல்வந்தர்களாக இருந்திருப்பர்” என்றார்.

“முழுவதுமாக தட்டையான பாலைவனமாக இருந்த காரணத்தால் இந்த பகுதி வழக்கத்துக்கு மாறான ஒன்றாக இருந்தது. பின்னர் இந்த பாலைவனத்தின் மேற்பரப்பில் பாறைகள் உருவாகின. பாறைகளுக்கு உள்ளே பொறிக்கப்பட்ட புதைக்கும் அறைகளை அவர்கள் உருவாக்கினர். அவற்றுக்கு கதவுகள் அமைக்கப்பட்டன. உடல்கள் பாறை சமாதியின் உள்ளே வைக்கப்பட்டன. இங்கு மக்கள் புதையலுடன் புதைக்கப்பட்டார்களா என்பது நமக்குத் தெரியாது. அவர்கள் அப்படி புதைக்கபட்டிருப்பதாக என்னால் கற்பனை செய்ய முடிந்தது” என்று மேலும் கூறினார்.

பயண ஏற்பாட்டாளர்கள் ஹெக்ராவுக்கு சுற்றுலா செல்ல பயண ஏற்பாடு செய்கின்றனர். இது ஹிஜாஸ் ரயில்வே என அறியப்படுகிறது. முன்பு முஸ்லிம் யாத்ரிகர்களை டமாஸ்கஸ் பகுதியில் இருந்து மெக்கா மற்றும் மதினா ஆகிய புனித நகரங்களுக்கு அழைத்துச் சென்றது அல்லது ஹாட் ஏர் பலூனில் புனித தலத்துக்கு கூட்டிச் செல்லப்பட்டனர். “இந்த பகுதியைச் சுற்றிலும் அகழ்வாராய்ச்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது” என ரெய்னர் கூறினார். “அரேபிய பாலைவனத்தின் ஆழமான பகுதியில் உள்ள இந்த புனித இடத்தின் பெரிய சூழலை அவர்கள் இப்போதுதான் அறிந்து கொள்ள தொடங்கியிருக்கின்றனர்” என்றார்.

# இலங்கையின் கல்விக் கொள்கையை 21ஆம் நூற்றாண்டின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் மேம்படுத்துவதன் அவசியம்

**Mrs.Valeswary Kuvendran**
**Km/Km/ Shanmuga M.V, Karaitivu**

இலங்கையின் கல்விக் கொள்கை சமூக நீதி மற்றும் வளர்ச்சியை நோக்காகக் கொண்டு செயல் படுகின்றது. இருப்பினும் நடைமுறையில் உள்ள சவால்களைத் தீர்த்து, 21ஆம் நூற்றாண்டின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் அதனை மேலும் மேம்படுத்துவது அவசியம்.



சமகாலத்தில் கல்விச் செயன்முறை பல்வேறு மாற்றங்களுக்கு உட்பட்டு வருகின்றது. இதனை விளக்கவும் பல்வேறு புதிய கோட்பாடுகள் உருவாக் கப்பட்டு வருகின்றன. இருப்பினும் அனைத்து தரப்பினருக்கும் பயனுள்ள வகையிலே கல்விச் செயறபாடுகளை முன்னெடுத்தல் சமூக நீதியாகும். கல்விப் புலத்தில் எழும் எழு வினாக்கள், இடர்கள், தடைகள், சவால்கள் என்பவற்றை கடக்க வேண்டிய இடைவெளிகளையும் கருத்து குவிப்புக்கு உள்ளாக் கிய வண்ணமுள்ளன. இலங்கையில் கல்வி முறை பல பிரச்சினை பாடுகளை எழுப்புகின்றன.

உலகை மாற்றக்கூடிய சக்தி வாய்ந்த ஆயதமே கல்வி என்று முழங்கியவர் நெல்சன் மண்டேலா. அவருடைய வார்த்தை பொய்யாக வில்லை. கல்வி ஒருவனது உள்ளத்தையும் அறிவினையும் பயன்படுத்தும் மாபெரும் சக்கியாகும்.

கல்வி முறையில் இலங்கையைப் பொறுத்த வரை வளப்பற்றாக்குறையானது பாரிய இடத்தைப் பிடித்துள்ளது. வளப்பற்றாக்குறையில் முதன்மை இடத்தைப் பிடிப்பது மனித வளமாகும். தரமான ஆசிரியர் இன்மை, பொருத்த மான பாடத்துறைக்குரிய ஆசிரியர் இன்மை, இன்றைய காலகட்டத்தில் காணப்படும் பெரும் பாரிய பிரச்சினை யாக உள்ளது. மேலும் பாடசாலை களைப் பொறுத்த வரை கட்டிடங்கள், தளபாடங்கள் என்பனவும் பெரும் பற்றாக்குறையாக காணப்படுகின்றது. நிதிகள் சமமாக பகிரப்படுவதும் இல்லை.

எனவே ஆசிரியர்களுக்கு தகுந்த பயிற்சிகளை வழங்கி சிறந்த ஆசிரியர்களாக மாற்ற வேண்டும். தேவையான பௌதீக வளங்கள் வழங்கப்பட்டு கற்றல் சூழலை மகிழ்ச் சிகரமானதாக மாற்ற வேண்டும். தேவையான நிதி வழங்கல் உரிய முறையில் உரிய காலத்தில் பகிர்ந்து கொடுக்கப்படல் வேண்டும்.

எமது நாட்டின் கல்வியானது வெறுமனே பெரும்பாலும் பரீட்சையை மையமாக கொண்டே செயற்பட்டு வருகின்றது. இதனால் மாணவர்களின் பகுத்தறிவு திறன்கள், ஆளமைகள் வளர்க்கப்படுவ தில்லை. எனவே கல்வியை வாழ்வதற்கு ஏற்ற வகையில் மாற்றி அமைத்து வழங்க வேண்டும்

நகர்ப்புற பாடசாலைகளைப் பொறுத்தவரை வழங்கப்படுகின்ற சலுகைகள், வளங்கள் கிராமப் புறங்களை விட வேறுபட்டவை. பல விளையாட்டுப் பிரிவுகள் பாடசாலையில் காணப்படுகின்றன. பல் வேறுபட்ட இணைப்பாடவிதான செயற்பாடுகள் அனுமதிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றன. ஆனால் இவை கிராமப்புற பாடசாலைகளில்

இல்லை. எனவே சம கல்வி வாய்ப்பை நாம் வழங்க வேண்டும்.

தற்போதைய கல்வியில் தொழில்நுட்ப கல்வி வழங்கப்படுகின்ற போதிலும் அவை போதுமானதாக காணப்படவில்லை. வழங்கப்படுகின்ற தொழிற் கல்விக்கு உரிய வேலைகளும் நாட்டில் போதுமா னதாக காணப்படவில்லை. எனவே எமது நாட்டின் அபிவிருத்திக்கு பொருத்தமான தொழில்களை உருவாக்குவதுடன் அதற்கு தகுதியானோரை பயிற்சியுடன் கூடிய கல்வியின் ஊடாக உருவாக்க வேண்டும்

1972 கல்வி சீர்திருத்தம், 1997 கல்வி சீர்திருத்தம் என பல்வேறு சீர் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன. இன்று 1939 கல்வி சட்டமே நடைமுறையில் உள்ளது

1983 இற்குப் பின்னர் ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் கணனி வள நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டு கணனி பயிற்சிகள் வழங்கப்பட்டன. இன்று கணனி அறிவு இல்லாதோர் மிக மிக குறைவு என்றே கூறவேண்டும்.

எவ்வளவுதான் டிஜிட்டல் மயமாக்கப்பட்ட கல்வி நடவடிக்கைகள் காணப்படுகின்ற போதிலும் எமது நாட்டினரிடையே அக்கல்வி முறைப்பயன்பாடு குறைவாகவே காணப்படுகின்றது. எனவே நவீன உலகிற்கு ஏற்றாற்போல் எமது கல்வி முறைகளும் மாற்றயமைக்கப்பட வேண்டும்

இலத்திரனியலில் செயல்படுகின்ற கல்வி முறையும் படிப்படியாக வளர்ச்சியடைந்து வருகி ன்றது. உதாரணமாக பல்கலைக்கழகங்களில் தொலைக்கல்வி முறை. நுழைவுப்படிவங்கள் சமர்ப்பித்தல் இலத்திரனியல் மயமாக்கப்பட்டுள்ள மையும் கல்வி வளர்ச்சியின் ஒரு முக்கிய அம்சமாகும்.

இவ்வாறு கல்வியில் துரித வளர்ச்சி கண்டுள்ள இலங்கை நாடு எதிர்காலத்தில் மென்மேலும் கல்வி துறையில் உயர்ந்த நிலைக்கு வர வேண்டும்.

## "இன்ஃபா"வின் சிந்தனைத் தொடர் – 32

### கதைகளால் நியமாகி...

### எனக்கு மொட்டை அடித்து விடுங்கள்

பரீட்சையில் முதலாவதாக வந்த மகளை அரவணைத்து பாராட்டிக் கொண்டிருந்தார்கள் பெற்றோர்கள்.

"உனக்கு என்ன வேண்டும் சொல்லு" என்று ஆசையாக கேட்டார்கள். "என்ன கேட்டாலும் தருவீர்களா?" என்று கேட்டாள் மகள். "கண்டிப்பாக உனக்கு இல்லாததா?"



"அப்படியானால் எனக்கு மொட்டை அடித்து விடுங்கள்" சிறுமி இதைச் சொன்னதும் பெற்றோருக்கு அதிர்ச்சி.

"ஏனம்மா உனக்கு முடி அழகாக இருக்கிறது"

"இல்லை எனக்கு மொட்டை அடிக்க வேண்டும்"

மகளின் வினோதமான கோரிக்கை பெற்றோருக்கு புரியவில்லை.

"ஏன்மா?" என்று மீண்டும் மீண்டும் கேட்டார்கள்.

இல்லை அம்மா என் தோழிக்கு புற்றுநோய் அதுக்கு மருந்து கொடுத்தார்கள். அதனால் அவள் முடியெல்லாம் கொட்டி விட்டது.

அவளை எல்லோரும் கேலி செய்கிறார்கள் அவளுக்கு துணைக்கு ஆள் இல்லை நானும் மொட்டை அடிச்சிட்டு போனால் அவளுக்கு துணையாக இருக்கும்.

அதுதான் எனக்கு மொட்டை அடித்து விடுங்கள் என்று கேட்கிறேன். மகள் சொல்லச் சொல்ல பெற்றோரின் மனம் உருகியது மகளின் மொட்டை ஆர்வத்தின் அர்த்தம் புரிந்தது. மறுநாள் அவள் மொட்டை தலையுடன் பள்ளிக்குச் சென்றாள்.

**நீதி – கஸ்டத்தில் கை கொடுப்பதுதான் நல்ல நட்பு**



# பின்லாந்து நாட்டின் கல்விமுறைமையும் இலங்கை பெற்றுக்கொள்ளக்கூடிய முன்மாதிரிகளும் (பகுதி 01)

**சிவசாமி மனோகரன்**
ஓய்வு நிலை சிரேஷ்ட விரிவுரையாளர்
தேசிய கல்வியியற் கல்லூரி

உலகிலே கல்வியில் முன்னணி வகிக்கும் நாடான பின்லாந்து வடக்கு ஐரோப்பாவில் அமைந்து ள்ளதொரு கிழக்கு ஸ்கெண்டினேவிய நாடாகும். வடக்கில் நோர்வே, கிழக்கில் ரஷ்யா, மேற்கில் பொத்னியா வளைகுடா மற்றும் தெற்கில் பின்லாந்து வளைகுடா என்பன இதன் நாற்புற எல்லைகளாகும். இந்நாட்டின் மொத்த பரப்பளவு 338,455 சதுர கிலோ மீற்றர்களாகும். மக்கள் தொகை 5.6 மில்லியனாகும். ஐரோப்பாவிலே அதிகளவான காடுகளைக் கொண் டுள்ள இந்நாட்டிலே 70% மேற்பட்ட நிலப்பரப்பிலே காடுகள் காணப்படுகின்றன. இயற்கை வனப்புமிக்க இந்நாட்டிலே அண்ணளவாக 188,000 ஏரிகள் காணப்படுகின்றன. பின்லாந்தின் கடலோர சூழலை வளமாக்கும் வகையிலே 70,000 இற்கும் மேற்பட்ட தீவுகள் அமைந்துள்ளன. இந்த புவியியல் அம்சங்கள் பின்லாந்தின் இயற்கை வளங்களையும் சுற்றுப்புறச் சூழலையும் பிரதிபலிப்பதோடு நாட்டின் சுற்றுலா மற்றும் வாழ்வாதாரத்தற்கு முக்கிய பங்கு வகிக்கின்றன.

உலகிலே சிறந்த கல்விமுறையைப் பின்பற்றும் நாடாகவும் மிகவும் மகிழ்ச்சிகரமான நாடாகவும் பின்லாந்து கருதப்படுகிறது. இதற்கான காரணங் களாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

### கல்வி ஆரம்பம் மற்றும் கல்விக் கட்டமைப்பு:

பின்லாந்து நாட்டிலே பிள்ளைகள் 7 வயதி லேயே தமது பாடசாலைக் கல்விக்குள் பிரவேசிக் கின்றனர். அதற்கு முன்னர் சுதந்திரமான கற்றல் சூழல் வழங்கப்படுகிறது. பாடசாலைகளிலே போட்டி களற்ற கற்றல் சூழல் நிலவுகிறது. ஒத்துழைப்பும் ஊக்குவிப்பும் முறையாக வழங்கப்படுகின்றன.

### சமத்துவமான கல்வி முறை:

பின்லாந்து கல்வி முறையில் அனைத்து மாணவர்களுக்கும் சமூகப் பின்னணி, பிராந்திய வேறுபாடு இல்லாமல் ஒரே தரமான கல்வி வழங்கப்படுகிறது. இது கல்வியில் சம உரிமையை வலியுறுத்துகிறது.

### மாணவர்களின் சுயமான கற்றல்:

மாணவர்கள் தமது சொந்த கற்றல் நடவடிக் கைகளில் பங்கேற்று குழுக்களில் இணைந்து செயற்படுகிறார்கள். ஆசிரியர்கள் மற்றும் மாணவர் கள் இடையேயான நம்பிக்கையான தொடர்பு நிலவுகிறது. செயற்பாடுகளின் போது மாணவர்களது சுய மதிப்பீடு முக்கியத்துவம் பெறுகிறது.

### குறைந்த அளவிலான பரீட்சைகள் மற்றும் அழுத்தம் இல்லாத கற்றல் சூழல்:

இங்கு பரீட்சைகள் குறைவாகவும் மாணவர் களைத் தரப்படுத்தல் முறைகள் தனிப்பட்ட முறை யில் இடம்பெறுவதாலும் மாணவர்கள் எவ்விதமான அழுத்தங்களும் இன்றி கற்றுக் கொள்ளக் கூடிய சூழல் உள்ளது.

### ஆசிரியர்களின் உயர்ந்த மதிப்பு:

பின்லாந்திலே ஆசிரியர் பணிக்கு மிகுந்த சமூகக் கௌரவம் வழங்கப்படுகிறது. சிறந்த ஆசிரிய மாணவர்களே ஆசிரியர் பயிற்சிக்கு தெரிவு செய்யப் படுகின்றனர். அரசு கல்விக் கொள்கைகளில் ஆசிரியர்களுக்கு முக்கிய இடம் வழங்கப்பட்டுள்ளது.

### மகிழ்ச்சிகரமான பிள்ளைகள்:

ஐக்கிய நாட்டு தாபனத்தின் உலகின் மகிழ்ச்சி கரமான நாடுகள் பற்றிய அறிக்கையில் பின்லாந்து தொடர்ந்து முதலிடம் பெற்று வருகிறது. இங்கு பாடசாலைகளில் நிலவுகின்ற மகிழ்ச்சிகரமான சூழல் மாணவர்களின் ஆர்வத்தையும் கல்வி கற்கும் திறனையும் மேம்படுத்துகிறது.

### உயர்ந்த வாழக்கைத் தரம் மற்றும் தொழில் வாய்ப்புக்கள்:

பின்லாந்து நாட்டிலே கல்வித் தரம் மட்டுமன்றி வாழ்வாதாரமும் உயர்நிலையில் காணப்படுகிறது. பின்லாந்திலே கல்வி கற்பதற்கு சர்வதேச மாணவர்

களிடையே போட்டி நிலவுகிறது. காரணம் தரமான கல்வியும் தொழிலுக்கான வழிகாட்டலும் தொழில் வாய்ப்புக்களும் தாராளமாக இங்கு கிடைக்கின்றன.

இதனால் பின்லாந்தின் கல்வி முறையானது உலகிலேயே சிறந்ததாகப் போற்றப்படுகிறது. ஏனெனில் சமத்துவம்இ மாணவர் மையமான கற்றல் சூழல்இ குறைந்த அழுத்தம்இ சிறந்த ஆசிரியர் மதிப்பு மற்றும் உயர்ந்த வாழ்க்கைத் தரம் ஆகியனவற்றை இந்நாட்டின் கல்வி முறையானது ஒருங்கிணைத்துள்ளது.

பின்லாந்து நாட்டின் கல்வி முறை ஏன் உலகின் சிறப்பான கல்விமுறையாக விளங்குகிறது. இதிலிருந்து இலங்கைப் பெற்றுக் கொள்ளக் கூடிய முன்மாதிரிகள் யாதென நாம் சிந்திப்பதனூடாக எமது நாட்டின் கல்வி முறைமையில் பொருத்தமான மாற்றங்களை விதந்துரைப்பதற்கு இது வழிகாட்டும் என நான் எதிர்பார்க்கிறேன்.

பின்லாந்து நாட்டிலே கட்டாயக் கல்வி முறைமைக் காணப்படுவதோடு இது முழுமையாக இலவசமாக வழங்கப்படுகிறது. இங்கு 7 வயது தொடக்கம் 16 வயது வரை கல்வி கட்டாய மானதாகும்.

அதேவேளை அரச பாடசாலைகளில் கல்வி முற்றிலும் இலவசமாக வழங்கப்படுகிறது. இங்கு தனியார் பாடசாலைகள் எதுவும் இல்லை. கல்வி யானது முற்றுமுழுதாக அரச கட்டுப்பாட்டிலேயே உள்ளது. இலங்கையிலே இலவச கட்டாயக் கல்விமுறைமை ஒன்று காணப்பட்டாலும் கல்வி முறைமையானது படிப்படியாக அரச கட்டுப்பாட்டி லிருந்து நழுவிப் போகின்ற நிலைமைகளும் காணப்படுகின்றன. அதேவேளை தனியார் பாடசாலைகளின் ஆதிக்கம் மேலோங்கக் கூடிய நிலைமைகள் தோன்றியுள்ளன. எனவே பின்லாந்து நாட்டிலே கல்விமுறைமையை நடைமுறைப்படுத்தும் விதத்தினை முன்மாதிரியாகக் கொண்டு இலங்கை யிலும் கல்வியை வழங்கும் முழுப் பொறுப்பினையும் அரசு ஏற்றுக் கொண்டு செயற்படுமிடத்து இலங்கை யின் கல்வி முறைமையில் படிப்படியான விருத்தியை எதிர்பார்க்கலாம்.

பின்லாந்திலே மாணவர்கள் மதிப்பீட்டுப் புள்ளிகள் அடிப்படையில் ஒருவருடன் ஒருவர் ஒப்பிடப்படுவதில்லை. ஒவ்வொரு மாணவரதும் தனித் திறமைகள் மற்றும் ஆர்வங்களை அடிப்படையாகக் கொண்டே கற்றல் முறைகள் அமைக்கப்படுகின்றன. திறன் விருத்தியை நோக்காகக் கொண்டே கணிப் பிடல் மற்றும் மதிப்பிடல் பணிகள் இடம்பெறுகின்றன. போட்டிமுறையிலான பரீட்சை முறைமைகள் அங்கு இல்லை. எனவே கல்வியில் சமத்துவம் மற்றும் சமூக நீதி பேணப்படுகிறது. இலங்கையின் தற்போதைய கல்வி முறைமையிலே போட்டி முறைமையிலான பரீட்சை முறைகள் ஆதிக்கம் செலுத்துகின்றன. கல்வியிலே உள்ளீர்த்தல் தொடக்கம் வேலை வாய்ப்பு வரை போட்டித் தன்மையான மதிப்பிடலும் செயன்முறைகளுமே பின்பற்றப்படுகின்றன. எனவே பின்லாந்து நாட்டின் கணிப்பிடல் மதிப்பிடல் முன்மாதிரிகளை இலங்கையின் கல்வி முறை மையில் பின்பற்றுமிடத்து கல்வியிலே நல்லதொரு மாற்றத்தை தோற்றுவிக்கலாம்.

மேலும் பின்லாந்து நாட்டின் கல்வி முறை மையிலே மாணவர்கள் இடையிலே போட்டித்தன்மை நிலவுவதில்லை. இங்கே மாணவர்கள் குழுவாகவும் ஒத்துழைப்புடன் இணைந்தும் கற்றல் செயற்பாடு களில் ஈடுபடும் வகையிலேயே கற்றல் செயன் முறைகள் இடம்பெறுகின்றன. கற்பித்தலை விட கற்றலுக்கே முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. மாண வர்கள் குழுவாகவும் இணைந்தும் கற்றல் செயன் முறைகள் ஈடுபடுவதனால் பல்வேறு சமூகத் திறன் கள் அவர்களிடையே விருத்தியடைகின்றன. மாண வர்களுக்கு வீட்டுப்பாடம் வழங்கப்படுவதில்லை.

இங்கு மாணவனது கற்றல் வேகத்துக்கு ஏற்ப கற்றல் சாத்தியமாக்கப்பட்டுள்ளது. இது மாணவனது தனியாள் திறனை விருத்தி செய்வதற்கு உதவுகிறது. சுதந்திரமான கற்றல் நிலைமைகள் காணப்படுவத னால் குடும்பத்துடன் மகிழ்ச்சியாகப் பொழுதைக் கழிப்பதற்கும் நன்றாக உறங்குவதற்கும் உடற் பயிற்சி செய்வதற்கும் சந்தர்ப்பங்கள் காணப்படு கின்றன. இவை கல்வி விருத்திக்கான முக்கிய அம்சங்களாகக் கருதப்படுகின்றன. ஆனால் இலங்கையின் தற்போது நடைமுறையில் உள்ள கல்வி முறையிலே ஓய்வு நேரப் பயன்பாடு மற்றும் விளையாட்டு என்பனவற்றை பாடசாலைக் கலைத் திட்டத்திலே தேர்ச்சிகளாக்கி வழங்கி வருகிறோம்.


பிள்ளைகள் பாடசாலையிலும் வீடுகளிலும் தனியார் கல்வி நிறுவனங்களிலும் ஓய்வு ஒழிச்சலின்றி கல்விச் செயன்முறைகளிலே ஈடுபடுகின்றனர். போட்டித் தன்மையின் காரணமாக சுயநலப் போக்கும் ஏனையோருக்கு உதவுகின்ற மனப்பான்மை இன்மையும் மேலோங்கியுள்ளன. எனவே பின்லாந்து கல்வி முறையிலே காணப்படுகின்ற சுதந்திரமான மற்றும் சுயாதீனமான நிலைமைகளையும் சுயவேகக் கற்றல் சந்தர்ப்பங்களையும் முன்மாதிரிகளாகக் கொண்டு கற்றல் கற்பித்தல் செயன்முறைகளை மாற்றியமைப்பதன் ஊடாக கல்விமுறைமையிலே விருத்திகளை எதிர்பார்க்கலாம்.

*****

# கார்ல் ரோஜர்ஸ்:

## சுய எண்ணக்கருவின் வழியே மனித வளர்ச்சி

- S. ஹோசலி -



The curious paradox is that when I accept myself just as I am, then I can change.

*Carl Rogers*

பிறப்பு: 1902 ஜனவரி 08 – அமெரிக்கா

இறப்பு: 1987 – வயது 85

மனிதனின் உளவியல் வளர்ச்சியைப் புரிந்து கொள்வதில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்திய உளவியலாளர் கார்ல் ரோஜர்ஸ் (Carl Rogers) "நவீன ஆலோசனை கூறலின் தந்தை" எனப் போற்றப்படுகிறார். மனிதனின் உள்ளார்ந்த அனுபவங்கள், சுய உணர்வு மற்றும் தனிப்பட்ட வளர்ச்சி ஆகியவற்றை மையமாகக் கொண்டு, இவர் உருவாக்கிய மனிதத்துவ உளவியல் அணுகுமுறை உலகளாவிய உளவியல் தத்துவத்தில் புதிய பரிமாணத்தை ஏற்படுத்தியது.

### தனியாள் சுய எண்ணக்கரு

ரோஜர்ஸின் கோட்பாடுகளில் முக்கியமானது "தனியாள் சுய எண்ணக்கரு" என்ற கருத்தாகும்.

ஒருவரின் மனநிலை, நடத்தை, கற்றல் மற்றும் முதிர்ச்சியை வழிநடத்தும் அடிப்படைத் தூணாக அவர் இதனை விளக்குகிறார்.

அவரது கூற்றுப்படி, ஒவ்வொரு நபருக்கும் தன்னைப்பற்றி ஒரு மனபடிமம் – "நான் யார்?" என்ற சுய உணர்வு உருவாகியிருக்கும். இந்த சுய எண்ணக்கரு நேர்மறையான வளர்ச்சியை அடையும் போது, நபர் தனது திறன்களை நம்பிக்கையுடன் வெளிப்படுத்த முடியும். ஆனால், அது எதிர்வகை எண்ணங்களால் பாதிக்கப்பட்டால், மனஅழுத்தம், தாழ்வு உணர்வு மற்றும் கற்றல் தடைகள் தோன்றும்.

இதனால், தனியாளின் சுய எண்ணக்கரு விருத்தியானது ஒருவரது ஆளுமை, கற்றல், முதிர்ச்சி, உளநிலை மற்றும் நடத்தைகள் என்பவற்றில் செல்வாக்கு செலுத்துமென்பது இவரது கோட்பாடுகளாக காணப்படுகின்றன.

### அவரது ஆலோசனை கொள்கைகள்

ரோஜர்ஸ் மனித மைய ஆலோசனையின் (Person-Centered Counseling) மூலம், நபர் தன்னை புரிந்துகொள்வதற்கும் வளர்ச்சியடைவதற்கும் வழி காட்டினார். இதில் ஆலோசகர் ஒரு உத்தரவாதம் வழங்குபவர் அல்ல் மாறாக, ஒருவரின் உணர்வுகளை புரிந்துகொண்டு அவருக்குள் உள்ள திறன்களை வெளிக்கொணரும் ஊக்குவிப்பாளராகச் செயல்படுகிறார்.

அவரது ஆலோசனை அணுகுமுறையின் மூன்று அடிப்படை அம்சங்கள்:

1. உண்மைத்தன்மை (Congruence): ஆலோசகர் தன்னை இயல்பாக வெளிப்படுத்த வேண்டும்.
2. உணர்வுணர்தல் (Empathy): கிளையண்டின் உணர்வுகளை ஆழமாகப் புரிந்துகொள்ள வேண்டும்.
3. நிபந்தனையற்ற நேர்வகைப் பார்வை (Unconditional Positive Regard): நபரை எந்த நிபந்தனையுமின்றி ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இந்த அணுகுமுறை, தனிநபர் தனது சுய எண்ணக்கருவை ஆரோக்கியமாக வளர்த்துக் கொள்ளும் சூழலை உருவாக்குகிறது.

### கல்வித் துறையில் தாக்கம்

இன்றும் இவரது கோட்பாடுகள் உளவியல் ஆலோசனை மற்றும் கல்வித் துறைகளில் பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றன.

பாடசாலைகளில் மாணவர்களுக்கு ஏற்படும் சவால்கள், அழுத்தங்கள் மற்றும் உளநிலைப்

பிரச்சினைகளுக்கான ஆலோசனையில் ரோஜர்ஸின் கொள்கைகள் மிகச் சிறந்த வழிகாட்டுதலாக இருக்கின்றன.

அவர் வலியுறுத்தியது – கற்றல் என்பது ஒரு சுய ஆராய்ச்சி செயல்முறையாக இருக்க வேண்டும் என்பதே. மாணவர் தன் உணர்வுகளை வெளிப்படுத் தவும், தவறுகளைச் சரிசெய்யவும், தனது திறன் களை வளர்த்துக்கொள்ளவும் ஏற்ற சூழலை ஆசிரியர் உருவாக்க வேண்டும்.


இது இன்றைய "கற்போர் மையக் கல்வி" மற்றும் "கட்டுருவாக்கவாதம்" ஆகிய கல்வி அணுகுமுறைகளின் அடித்தளமாகக் காணப்படுகிறது.

கார்ல் ரோஜர்ஸ், மனிதனை இயல்பாகவே வளர்ச்சி, மாற்றம், நன்மை ஆகியவற்றிற்கு தகுதியானவராகக் கண்டார். அவர் முன்வைத்த "தனியாள் சுய எண்ணக்கரு விருத்தி" என்ற கோட்பாடு ஒவ்வொரு நபரின் உளநலத்திற்கும் கல்வி வளர்ச்சிக்கும் பெரும் பங்காற்றுகிறது.

மாணவர்களின் மனஅழுத்தம், தாழ்வு உணர்வு, கற்றல் தடைகள் போன்றவற்றை சமாளிக்க, ஆசிரியரும் ஆலோசகரும் ரோஜர்ஸின் கொள்கைகளை தங்கள் நடைமுறைகளில் ஒருங்கிணைத்தால், கல்வி சூழல் மனிதநேயம், புரிதல் மற்றும் உணர்வுணர்தல் நிரம்பியதாக மாறும்.

# Dhora 'WIN' வரிகள்

## வார்த்தை



இங்குள்ள அனைவருக்கும் சண்டையிட்ட பின் சமாதானமாக விருப்பமா இல்லையா எனக் கேட்டால் இல்லை எனப் பதில் வந்தாலும், சாகும்வரை அவருடன் பேசமாட்டேன் எனச்சபதமே செய்து கொண்டாலும் காலப்போக்கில் அந்தப்பிடி வாதத்தின் அளவு குறைந்து பேச எத்தனிப்போம் என்பது நிதர்சன உண்மை. அதனை நாம் உணர முன்னர் வார்த்தை எனும் அம்புகளில் வலிமை அனைத்தையும் சேர்த்த ஆயுதமாக்கி சம்மந்தப் பட்டவரை குத்திக்கிழித்து விடுகின்றோம். பின்னாளில் பிரச்சினைகளே மறந்து போனாலும் வார்த்தை அம்பின் துளைகள் ஆறா வடுவாய் ஆகிவிடுகின்றன. அவ்வம்பில் தாக்கப்பட்ட வரே காயத்தை சிறிது மறந்தாலும் கூட அளவுக்கதிக மாக வார்த்தையம்பை எய்தவர் குற்ற உணர்ச்சியில் துடித்துதான் போகிறார்கள். அதனால் வெட்கித் தலை குனிகிறார்கள் தமக்குள்ளே மன்னிப்புக்கேட்க தகுதி யற்றவராய் தன்னைத் தானே தாழ்த்தி மனவேதனைப் படவும் செய்கிறார். உண்மையில் நாம் உணரவேண்டியது ஒன்றுதான் அது என்னவென்றால் இப்பிரபஞ்சத்தில் உள்ள அனைத்தும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவை ஏன் புறதிருப்பங்களுக்கு ஒப்பானவை ஆகும். ஏன் கோள்கள் துணைக் கோள்களையே எடுத்துக்கொள்ளுங்கள் இப்பிரபஞ்சம் மிகவும் விசித்திரமான ஈர்ப்புவிசைச் சுழற்சியையும் இடைத்தொடர்பையும் கொண்டமைந்தது

சூரிய, சந்திர, கோள்கள் என அனைத்திலும் தனித்தியங்க முடியாது எனும் வாழ்க்கைத் தத்துவத்தை எடுத்துரைக்கிறது எனவே எந்தப்பொருளோ உயிரினமோ மனிதனோ அனைத்தும் படைக்கப்பட்டதற்கு ஒரு காரண காரியம் நிச்சயம் இருக்கின்றது அது வெறுமனே சூழற்சமநிலையை மட்டும் வலியுறுத்தவில்லை எண்ணங்களின் சமநிலை, உறவுகளின் சமநிலையையும், பகுத்தறிவின் சமநிலை என பல வற்றின் திரட்சியை வலியுறுத்துகின்றன. வேறும் நா எனும் வில்லினால் சொல்லெனும் அம்பை வீசி

*பிரபஞ்ச விதிகளை மீற முயலாதீர்....*

- டயானா சிவராஜா -

# பாடசாலைகளில் அனர்த்த முகாமைத்துவ செயற்றிட்டம்



**நா.அம்பிகைபாகன் (B.Sc, PGDE, HNDIT, M.Ed, M.Sc(IT))**
விரிவுரையாளர்
தேசிய கல்வியியற் கல்லூரி
யாழ்ப்பாணம்



## அனர்த்தம் (Disaster)

அனர்த்தம் என்பது திடீரென நிகழும், மனித உயிர், சொத்து, சுற்றுச்சூழல் மற்றும் சமூக வாழ்க்கைக்கு மிகுந்த சேதத்தை ஏற்படுத்தும் நிகழ்வாகும்.இது இயற்கையாக (உதாரணம்: வெள்ளம், நிலநடுக்கம், புயல்) அல்லது மனிதனால் ஏற்படும் (உதாரணம்: தீவிபத்து, நச்சுவாயுக் கசிவு) ஆகிய இரு வகைகளாக இருக்கலாம்.

“மனிதர்களின் வாழ்வை, சொத்துக்களை மற்றும் சுற்றுச்சூழலை தீவிரமாக பாதிக்கும் திடீர் நிகழ்வே அனர்த்தம் ஆகும்.”

உதாரணங்கள்:

- வெள்ளம் (Flood)
- நிலநடுக்கம் (Earthquake)
- தீவிபத்து (Fire accident)
- சுனாமி (Tsunami)
- வறட்சி (Drought)
- புயல் (Cyclone)
- நோய் பரவல் (Epidemic)

## பாடசாலைகளில் அனர்த்தம் (Disaster in Schools)

பாடசாலைகளில் அனர்த்தம் என்பது பள்ளி வளாகத்தில் அல்லது அதன் சுற்றுப்புறத்தில் திடீரென ஏற்படும், மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பள்ளி சொத்துக்களுக்கு அபாயத்தை ஏற்படுத்தும் நிகழ்வாகும். இது தீவிபத்து, நிலநடுக்கம், வெள்ளம், மின் கசிவு, ஆய்வக விபத்து போன்றவற்றாக இருக்கலாம்.

“மாணவர்களின் உயிர், ஆரோக்கியம் மற்றும் பள்ளி சொத்துக்களை ஆபத்துக்குள்ளாக்கும் திடீர் அவசரநிலையே பாடசாலைகளில் அனர்த்தம் ஆகும்.”

பாடசாலைகளில் நிகழக்கூடிய அனர்த்தங்கள்

- ஆய்வுகூடத்தில் தீவிபத்து (Fire accident in laboratory)
- கட்டிட இடிதல் (Building collapse)
- மின் கசிவு அல்லது குறுக்கோட்டம் (Electrical short circuit or malfunction)
- வெள்ளம் அல்லது புயல் தாக்கம் (Flood or cyclone impact)

- உணவு நஞ்சாதல் (Food poisoning)
- நோய் பரவல் (Epidemic / Disease outbreak)

## அனர்த்த முகாமைத்துவத் திட்டங்கள் (Disaster Management Projects)

1. வெள்ளம் ஏற்பட்டபோது பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் மாணவர் விழிப்புணர்வு (**Flood Awareness and Safety Plan)**
2. பாடராலைகளில் தீவிபத்திலிருந்து பாதுகாப்பு நடைமுறைகள் (**Fire Safety in Schools)**
3. நிலநடுக்கம் ஏற்பட்டபோது செய்யவேண்டிய நடவடிக்கைகள் (**Earthquake Preparedness)**
4. மாணவர்களுக்கு முதல் உதவி பயிற்சி வழங்குதல் (**Drill First Aid Training for Students)**
5. கணினி மற்றும் மொபைல் பயன்பாட்டின் மூலம் அனர்த்த எச்சரிக்கை அமைப்பு உருவாக்குதல் (**ICT-Based Disaster Alert System )**
6. பாடசாலையில் அனர்த்த முகாமைத்துவ குழு அமைத்தல் (**Creating a School Disaster Management Committee)**
7. தீவிபத்து மற்றும் வெளியேற்றப் பயிற்சி நிகழ்ச்சி நடத்துதல் (**Mock Fire and Evacuation Drill)**
8. இயற்கை அனர்த்தங்கள் குறித்த போஸ்டர் மற்றும் வரைபடக் கண்காட்சி **(Poster and Chart Exhibition on Natural Disasters)**
9. வெள்ளம் மற்றும் வறட்சிக்கு சமூக விழிப்புணர்வு நிகழ்ச்சி **Community Awareness on Flood and Drought**
10. நிலநடுக்கத்திற்கேற்ற கட்டிட வடிவமைப்பின் மாதிரி தயாரித்தல் (**Earthquake Resistant Building Design (Model)**
11. பேரிடர்களைத் தடுக்கும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகள் (**Environmental Conservation to Prevent Disasters)**
12. மாணவர்களுக்கான பேரிடர் தகவல் மொபைல் செயலி வடிவமைப்பு **Disaster Management Mobile App (Concept Project)**
13. சுனாமி ஏற்பட்டால் செய்யவேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் (**Tsunami Preparedness and Evacuation Plan)**
14. புயல் ஏற்படும் முன் பாதுகாப்பு விழிப்புணர்வு இயக்கம் **(Cyclone Awareness Campaign)**
15. பேரிடர் முகாமையில் தகவல் தொழில்நுட்பத்தின் பங்கு (**Role of ICT in Disaster Management)**
16. பிளாஸ்டிக் கழிவுகள் நீக்கத்தின் மூலம் வெள்ளம் குறைப்புத் திட்டம் (**Plastic Waste Management and Flood Control )**
17. மாணவர்களுக்கு அனர்த்த விழிப்புணர்வு வினாடி வினா போட்டி (**Disaster Preparedness Quiz and Competition)**
18. மாணவர்களுக்கு அனிமேஷன் வீடியோவின் மூலம் விழிப்புணர்வு உருவாக்குதல் (**Creating Animated Videos for Disaster Awareness)**
19. அவசர உதவி எண்கள் அடங்கிய வழிகாட்டி உருவாக்குதல் (**Emergency Contact and Helpline Directory Project)**
20. மழைநீர் சேகரிப்பு திட்டம் மூலம் வெள்ளம் குறைக்கும் முயற்சி **(Rainwater Harvesting to Reduce Flood Impact)**


போன்ற செயற்றிட்டங்கள் மாணவர்களின் விழிப்புணர்வு, நிதானம் மற்றும் செயல் திறனை வளர்க்கும்.

# கல்வி 4.0

## எதிர்கால மாற்றத்திற்கான திறவுகோள் (04)

- Gajooran.G –

### பொருட்களின் இணையம் (Internet of Things - IoT)




IoT என்பது இணையத்துடன் இணைக்கப்பட்ட இயற்பியல் சாதனங்களின் பிணையமாகும், அவை தரவுகளைச் சேகரித்து பரிமாறிக் கொள்கின்றன. கல்வியில், இது அறிவார்ந்த மற்றும் ஊடாடும் கற்றல் சூழல்களை உருவாக்கப் பயன்படுகிறது.

**திறன் வகுப்பறைகள் (Smart Classrooms)**

IoT சாதனங்கள் வகுப்பறை சூழலை தானியங்குபடுத்தி, மாணவர்களின் கற்றல் அனுபவத்தை மேம்படுத்துகின்றன.

எடுத்துக்காட்டாக, IoT உணர்திறன்கள் (Sensors) மூலம் வகுப்பறையின் வெப்பநிலை, வெளிச்சம் மற்றும் காற்றுத் தரம் கண்காணிக்கப் பட்டு, தானாகவே சரிசெய்யப்படும். திறன் பலகைகள் (Smart Boards) மாணவர்களின் வருகையைக் கண்டறியும் அல்லது குறிப்பிட்ட பாடத்திற்கான உள்ளடக்கத்தை தானாகவே ஏற்றும்.

**தரவு சேகரிப்பு மற்றும் பகுப்பாய்வு (Data Collection and Analysis)**

மாணவர்களின் வகுப்பறை ஈடுபாடு, உடல் அசைவுகள் (உதாரணமாக, STEM ஆய்வகங்களில் உபகரணங்களைப் பயன்படுத்துதல்), மற்றும் கற்றல் சூழல் குறித்த தரவுகளை IoT சாதனங்கள் மூலம் சேகரிக்க முடியும். இந்தத் தரவுகள் மாணவர்களின் கற்றல் பழக்கவழக்கங்கள் மற்றும் செயல்திறன் குறித்த மதிப்புமிக்க நுண்ணறிவுகளை வழங்கு கின்றன.


எடுத்துக்காட்டாக, ஒரு மாணவர் ஒரு STEM திட்டத்தில் பணிபுரியும் போது, IoT-ஆற்றல் பெற்ற உபகரணங்கள் மாணவர் உபகரணங்களை எவ்வாறு கையாளுகிறார், எத்தனை முறை முயற்சி செய் கிறார் மற்றும் எந்தப் பகுதிகளில் உதவி தேவைப் படுகிறது என்பது குறித்த தரவுகளை சேகரிக்கலாம். இந்தத் தரவு ஆசிரியருக்கு மாணவர் எவ்வாறு சிறப்பாகக் கற்றுக்கொள்கிறார் என்பதைப் புரிந்து கொள்ள உதவும்.

**பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பு (Safety and Monitoring)**

பாடசாலை வளாகத்தின் பாதுகாப்பை மேம்படுத்த IoT சாதனங்கள் பயன்படுத்தப்படலாம்.

எடுத்துக்காட்டாக, பாடசாலை நுழைவாயில் களில் உள்ள IoT-அடிப்படையிலான கேமராக்கள் மற்றும் உணர்திறன்கள், அங்கீகரிக்கப்படாத நபர் களைக் கண்டறியும் அல்லது அவசரகால சூழ்நிலை களில் எச்சரிக்கை ஒலி எழுப்பும்.

### கற்றல் மேலாண்மை அமைப்புகள் (Learning Management Systems - LMS)




LMS என்பது கற்றல் உள்ளடக்கம், நிர்வாகம், கண்காணிப்பு, மதிப்பீடு மற்றும் கற்பித்தல் ஆகியவற்றை ஒரு ஒற்றை தளத்தில் நிர்வகிப் பதற்கான ஒரு மென்பொருள் பயன்பாடாகும்.

**உள்ளடக்க மேலாண்மை மற்றும் அணுகல் (Content Management and Access)**

ஆசிரியர்கள் விரிவுரைக் குறிப்புகள், வீடியோக் கள், பணிகள், வினாடி வினாக்கள் மற்றும் பிற கற்றல் பொருட்களை LMS இல் பதிவேற்றி ஒழுங்கமைக்கலாம். மாணவர்கள் எந்த நேரத்திலும், எந்த இடத்திலிருந்தும் இந்த உள்ளடக்கங்களை அணுகலாம்.

எடுத்துக்காட்டாக, ஒரு பல்கலைக்கழகம் Moodle அல்லது Canvas போன்ற LMS ஐப் பயன்படுத்துகிறது. ஒரு பேராசிரியர் தங்கள் பாடத்திற்கான அனைத்து PowerPoint Slide கள், வீடியோ விரிவுரைகள், படிப்பதற்கான கட்டுரைகள் மற்றும் வாராந்திர பணிகள் அனைத்தையும் ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் பதிவேற்றுகிறார். மாணவர்கள் தங்கள் வீடுகளிலிருந்தே உள் நுழைந்து அனைத்தையும் அணுகி, சமர்ப்பிக்கலாம்.

**ஒத்துழைப்பு மற்றும் தொடர்பு (Collaboration and Communication)**

LMS ஆனது கலந்துரையாடல் மன்றங்கள், குழு திட்டப் பகுதிகள் மற்றும் அறிவிப்பு பலகைகள் போன்ற அம்சங்களை உள்ளடக்கியது, இது மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இடையே திறம்பட ஒத்துழைக்கவும் தொடர்பு கொள்ளவும் உதவுகிறது.

எடுத்துக்காட்டாக, ஒரு குழு திட்டத்திற்கு, மாணவர்கள் LMS இல் ஒரு பொதுவான கோப்புப் பகிர்வுப் பகுதியைப் பயன்படுத்தி ஆவணங்களைப் பகிரலாம், ஒரு விவாத மன்றத்தில் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளலாம், மேலும் ஆசிரியரால் குழுவின் முன்னேற்றத்தைக் கண்காணிக்க முடியும்.


**மதிப்பீடு மற்றும் பின்னூட்டம் (Assessment and Feedback)**

LMS ஆனது நிகழ்நிலைப் பரீட்சைகள், வினாடி வினாக்கள் மற்றும் பணிகளைச் சமர்ப்பிப்பதற்கான கருவிகளை வழங்குகிறது. ஆசிரியர்கள் எளிதாக மதிப்பெண்களை இட்டு, மாணவர்களுக்கு உடனடி மற்றும் விரிவான பின்னூட்டத்தை வழங்க முடியும்.

எடுத்துக்காட்டாக, ஒரு மாணவர் LMS இல் ஒரு நிகழ்நிலை வினாடி வினாவை முடிக்கிறார். வினாடி வினா முடிந்தவுடன், LMS ஆனது சரியான பதில்கள், தவறான பதில்களுக்கான விளக்கங்கள் மற்றும் மாணவரின் ஒட்டுமொத்த மதிப்பெண் ஆகியவற்றை உடனடியாகக் காட்டுகிறது.

## பிளாக்செயின் (Blockchain)

பிளாக்செயின் என்பது ஒரு பரவலாக்கப்பட்ட, பொதுவான மற்றும் மாற்ற முடியாத டிஜிட்டல் பதிவேடு ஆகும். இதன் பாதுகாப்பு மற்றும் வெளிப்படைத்தன்மை கல்வித் துறையில் புதிய வாய்ப்புகளை உருவாக்குகின்றன.




**சான்றிதழ் மற்றும் அடையாள சரிபார்ப்பு (Credentialing and Identity Verification)**

பிளாக்செயின் தொழில்நுட்பம் மாணவர்களின் கல்விச் சான்றிதழ்கள், பட்டம், திறன்கள் மற்றும் பிற அடையாள ஆவணங்களை பாதுகாப்பாகவும், மாற்ற முடியாத வகையிலும் சேமிக்க முடியும். இது போலிச் சான்றிதழ்களைத் தடுக்கிறது மற்றும் சரிபார்ப்பு செயல்முறையை விரைவுபடுத்துகிறது.


எடுத்துக்காட்டாக, ஒரு மாணவர் ஒரு பல்கலைக்கழகத்தில் இருந்து பட்டம் பெறும்போது, அவர்களின் பட்டம் பிளாக்செயினில் ஒரு "டிஜிட்டல் சான்றிதழாக" (Digital Credential) பதிவு செய்யப் படுகிறது. ஒரு வேலைவாய்ப்பு நிறுவனம், அந்த மாணவரின் பட்டத்தைச் சரிபார்க்கும்போது, பிளாக் செயின் பதிவேட்டை அணுகி அதன் நம்பகத் தன்மையை உடனடியாக உறுதிப்படுத்த முடியும்.

**வாழ்நாள் முழுவதும் கற்றல் பதிவுகள் (Lifelong Learning Records)**

தனிநபர்களின் கற்றல் பயணத்தின் அனைத்து பதிவுகளையும் (வகுப்புப் பணிகள், படிப்புகள், சான்றிதழ்கள், திறன்கள்) பாதுகாப்பாக சேமிக்க பிளாக்செயின் பயன்படுத்தப்படலாம், இது அவர்களுக்கு வாழ்நாள் முழுவதும் ஒரு எண்மிய கல்விச் செயலடைவுக் கோவையை (Digital Academic Portfolio) உருவாக்குகிறது.

எடுத்துக்காட்டாக, ஒரு தனிநபர் வெவ்வேறு கல்வி நிறுவனங்களில் இருந்து பெற்ற பட்டங்கள், நிகழ்நிலைப் படிப்புகள் மூலம் பெற்ற சான்றிதழ்கள், தொழில்முறை மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் தனிப்பட்ட திறன்கள் அனைத்தையும் ஒரே பிளாக் செயின் அடிப்படையிலான செயலடைவுக் கோவையில் சேமிக்கலாம். இது அவர்கள் தங்கள் கல்வி மற்றும் திறன்களை எளிதாக நிரூபிக்க உதவுகிறது.

## கிளவுட் கம்ப்யூட்டிங் (Cloud Computing)




கிளவுட் கம்ப்யூட்டிங் என்பது இணையம் மூலம் கணினி சேவைகளை (சேமிப்பு, செயலாக்கத் திறன், மென்பொருள்) வழங்குவதாகும். இது கல்வித் துறையில் பெரும் நெகிழ்வுத் தன்மையையும் அணுகல்தன்மையையும் வழங்குகிறது.

**அணுகல்தன்மை மற்றும் நெகிழ்வுத்தன்மை (Accessibility and Flexibility):**

கிளவுட் அடிப்படையிலான தளங்கள் மூலம், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் எந்த இடத்திலிருந்தும், எந்த சாதனத்திலிருந்தும் (கணினி, டேப்லெட், ஸ்மார்ட்போன்) கற்றல் ஆதாரங்கள் மற்றும் மென்பொருட்களை அணுக முடியும். இது தொலைதூரக் கற்றல், கலப்புக் கற்றல் மற்றும் சுயமாகக் கற்கும் சூழல்களுக்கு இன்றியமையாதது.

எடுத்துக்காட்டாக, Google Docs அல்லது Microsoft 365 போன்ற கிளவுட் அடிப்படையிலான கருவிகள் மூலம், மாணவர்கள் குழு திட்டங்களில் நிகழ்நிலையில் ஒத்துழைக்கலாம், மேலும் அவர்களின் ஆவணங்கள் தானாகவே சேமிக்கப்பட்டு எந்தச் சாதனத்திலிருந்தும் அணுகப்படும்.

**சேமிப்பு மற்றும் பகிர்வு (Storage and Sharing):**

கிளவுட் பெரிய அளவிலான தரவுகளையும் கற்றல் உள்ளடக்கத்தையும் பாதுகாப்பாகச் சேமிக்க அனுமதிக்கிறது. இது மாணவர்கள் தங்கள் திட்டங்கள், ஆராய்ச்சி மற்றும் கற்றல் துணைச்சாதனங்களை எளிதாகப் பகிரவும், குழுக்களுடன் ஒத்துழைக்கவும் உதவுகிறது.

எடுத்துக்காட்டாக, ஆசிரியர்கள் வீடியோ விரிவுரைகள், பெரிய தரவுத் தொகுப்புகள் மற்றும் மென்பொருள் நிரல்களை கிளவுடில் சேமித்து, அவற்றை மாணவர்களுக்கு உடனடியாகப் பகிரலாம், இது கோப்பு அளவு வரம்புகளை நீக்குகிறது.

## பிற முக்கிய கருவிகள் மற்றும் அணுகுமுறைகள்

**எண்மியக் குடிமக்கள் (Digital Citizenship):**

மாணவர்கள் நிகழ்நிலை உலகில் பொறுப்புடன் நடந்துகொள்ளவும், இணையப் பாதுகாப்பு, தனியுரிமை மற்றும் எண்மிய நெறிமுறைகளை புரிந்துகொள்ளவும் தேவையான திறன்கள் கற்பிக்கப்படுகின்றன.

எடுத்துக்காட்டாக, பாடசாலைகள் எண்மிய ஃபுட்பிரின்ட், சைபர் புல்லிங் தடுப்பு மற்றும் நம்பகமான தகவல் ஆதாரங்களை அடையாளம் காண்பது குறித்த பாடங்களை நடத்துகின்றன.

**கேமிஃபிகேஷன் (Gamification):**

கற்றல் செயல்பாட்டில் விளையாட்டு கூறுகளை (புள்ளிகள், பேட்ஜ்கள், லீடர்போர்டுகள், சவால்கள்) ஒருங்கிணைத்து மாணவர்களின் ஈடுபாடு, உந்துதல் மற்றும் கற்றல் அனுபவத்தை அதிகரிப்பது.

எடுத்துக்காட்டாக, ஒரு மொழி கற்றல் செயலி, சரியான பதில்களுக்கு புள்ளிகளை வழங்குவதன் மூலமும், தினசரி சவால்களை முடிப்பதன் மூலமும், மற்ற மாணவர்களுடன் லீடர்போர்டில் போட்டியிடுவதன் மூலமும் மாணவர்களை தொடர்ந்து கற்றுக்கொள்ள ஊக்குவிக்கிறது.

**ரோபாட்டிக்ஸ் மற்றும் கோடிங் (Robotics and Coding):**

மாணவர்களுக்கு எதிர்காலத் தொழில்நுட்பங்களுக்குத் தேவையான அடிப்படை ரோபாட்டிக்ஸ் வடிவமைப்பு, செயல்பாடு மற்றும் கணினி நிரலாக்க திறன்களைக் கற்பித்தல். இது விமர்சன சிந்தனை, சிக்கல் தீர்க்கும் திறன் மற்றும் படைப்பாற்றலை வளர்க்கிறது.

எடுத்துக்காட்டாக, மாணவர்கள் சிறிய ரோபோக்களை வடிவமைத்து நிரல் எழுதுவதன் மூலம் இயற்பியல், பொறியியல் மற்றும் கணிதக் கருத்துக்களை நடைமுறை ரீதியாகப் புரிந்துகொள்கிறார்கள். இது அவர்களுக்கு STEM துறைகளில் ஆர்வத்தை ஏற்படுத்துகிறது.

இந்த தொழில்நுட்பங்கள் அனைத்தும் இணைந்து கல்வி 4.0ஐ ஒரு வலுவான, ஊடாடும் மற்றும் எதிர்காலத் தயாரான கல்வி அமைப்பாக மாற்றுகின்றன. இவை மாணவர்களுக்கு அறிவுசார், சமூக மற்றும் தொழில்முறை திறன்களை வளர்த்து, மாறிவரும் உலகிற்கு ஏற்றவாறு அவர்களை தயார்படுத்துகின்றன.

தொடரும்...

## தந்தையர் தினம்

பிள்ளைகளுக்காக பல தியாகம் செய்தாலும் அதை முகத்தில் காட்டாய் சிறு புன்னகையுடன் தான் காணாத உலகத்தை தன் பிள்ளை காண வேண்டும் என்று தோளில் சுமக்கும் உன்னதமான உறவு அப்பா! அன்பையும் அறிவையும் நீ புகட்டி தினம் தினம் நெஞ்சில் சுமந்தாயே. அப்பா என்று அழுகை ஒலி கேட்டால் ஓடோடி வந்து கட்டி அணைத்திடுவாய் முற்றத்தின் வீதியெல்லாம் சுற்றிக் காட்டினாய்!

நான் சுகமாகவாழ்ந்த நாட்கள் எல்லாம் நீ சுமையாக வாழ்ந்து இந்த உலகத்தை காட்டினாய்.

எனது ராஜா நீ உனது இந்த தினத்தில் மகத்தான தந்தையர் தின வாழ்த்துக்கள் !!

**- Mohana Parthipan -**



## A Sun’s Holiday

*Every day the sun comes to town,*
*Brightly shining like a golden crown.*
*I feel its warmth upon my face,*
*I play with its light, a happy race.*

*It looks like a fiery ball,*
*But for me and my friends,*
*it’s a play ball.*
*We throw our ball for him to catch,*
*He throws it back, a perfect catch.*

*But one day, the sun went away,*
*It was so dark, so spooky, no play.*
*The whole world filled with cold and quiet,*
*I guess the sun is resting, like you and me, in peace.*

M.Sasthika
Grade 5B
Bishop’s College,
Colombo 03

## கதை வழி அற மொழி

திரு. ம. நிரேஸ்குமார்
சிரேஷ்ட விரிவுரையாளர்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி




☞ Click Here for Watch it




☞ Click Here for Watch it





☞ Click Here for Watch it




☞ Click Here for Watch it

# பேசும் படங்கள்

**Art by. M.J.F. Nasma**


குருசேத்திரம்
குருசேத்திரம்
Guruseththiram
சமூகத்திற்கான மாற்றம் என்னிலிருந்து...

"குருசேத்திரம்" மாதாந்த சஞ்சிகைக்கான ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன.

- சிறுகதை
- தொடர்கதை
- கட்டுரை
- கவிதை
- ஓவியங்கள்

தங்களின் ஆக்கங்கள் இரு பக்கத்திற்குள் உள்ளடங்குவது விரும்பத்தக்கது.
சுய ஆக்கங்களாக இருத்தல் வேண்டும், இல்லையேல் உசாத்துணை / பெற்ற மூலம் குறிப்பிடவும்.

சிறந்த ஆக்கங்களுக்கு பணப்பரிசில்கள் வழங்கப்படும் (நிபந்தனைகளுக்குட்பட்டது)

குருசேத்திரம் உங்களின் களம்...
அனைவரும் ஆக்கங்களை ஒவ்வொரு மாதமும் 10ஆம் திகதிக்கு முன்னர் எமது மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.
guruseththiram@gmail.com
www.guruseththiram.blogspot.com
– குருசேத்திரம் குழுமம் –



சம்மந்தப்பட்டவர்களுக்கு, நேர்முகப்பரீட்சை மற்றும் ஆவணப்படுத்தல் அல்லது நூலகத் தேவைகளுக்காக இவ் குருசேத்திரம் மின்னிதழ் தேவைப்படுபவர்கள் A4/A3 தாள்களில் பிரதி எடுத்துக்கொள்ளலாம். எனினும் ஆசிரியரின் அல்லது கட்டுரையாளரின் அனுமதியின்றி மீள்பிரசுரம் செய்வது தவிர்க்கப்பட்டுள்ளது.

*- ஞா.கயூரன், பதிப்பாசிரியர் -*